தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 மார்ச் 3

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள் (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு உதவி.

*வினா எண். 198—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வயல்களில் பூச்சி மருந்து தெளிக்கும் போது நச்சு வாயுவால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவிப்பணம் வழங்கும் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, வயல்களில் பூச்சி மருந்து தெளிக்கும்போது அந்தத் தொழிலாளர்கள் நச்சு வாயுவால் பாதிக்கப்பட்டு விடுகிறபோது உதவித்தொகை அளிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மருந்து தெளிக்கும்போது நச்சுவாயுவால் பாதிக்கப்பட்டு இறந்து போவது மட்டுமல்லாமல் சிலபல நேரங்களில் வயல்களில் வேலை செய்யும்போது விவசாயிகள் நச்சுப்பாம்புகளால் கடிபட்டும் இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கும்— அத்தகைய பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உதவிப்பணம் வழங்க அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட திட்டம் இன்றைக்கு அரசின் ஆலோசனையில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யலாம் ஆனால் வயல்வெளிகளில் பாம்பு கடித்து யாரும் இறந்து விட்டதாகத் தகவல் இல்லை. ஏனென்றால் வயல்வெளிகளில் நச்சுப் பாம்புகள் இருப்பது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கிட்டப்பா கேட்கிறானே என்று வேண்டுமானால் அவர்கள் அப்படி நிலைத்தி

ருக்கலாம். வயல்வெளிகளில் தண்ணீர்ப்பாம்பு மட்டுமல்ல. விஷப் பாம்புகளும் இருக்கின்றன. எல்லா நேரங்களிலும் வயல்வெளி களில் விஷப்பாம்பு இருப்பதில்லை என்பது தெரியும். தண்ணீர் இல்லாத நேரங்களில், கோடையில் வெடிப்பு ஏற்படுகின்ற நேரங்களில் நச்சுப் பாம்புகள் இருப்பது உண்டு. அத்தகைய நேரங்களில் வயல்வெளிகளில் பாடுபடுகின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, கிட்டப்பாவை மறந்துவிட்டு நச்சுப்பாம்புகளை நினைத்து, பாதிக்கப்படுகின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர் களே, நான் நிச்சயமாக நச்சுப் பாம்பையும், கிட்டப்பாவையும் ஒரே மாதிரியாக எண்ணிப்பார்க்க மாட்டேன். திரு. கிட்டப்பா சொல்வதைப்போல கோடைக் காலங்களில் வயல்வெளிகளில் நச்சுப்பாம்பு இருக்கிறது. ஆனால் தண்ணீர் பாய ஆரம்பித்த வுடன் நல்லபாம்பு போன்ற நச்சுப் பாம்புகள் போய்விடுகின்றன சாரைக்கடா, தண்ணீர் பாம்பு போன்ற பாம்புகள்தான் இருக்கும். கோடைக் காலங்களில் நச்சுப்பாம்புகளால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவதால் எதிர் காலத்தில் அரசு அதுபற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் நச்சுப்பாம்பை மட்டும் குறிப்பிட்டார்கள். பொதுவாக விவசாயத் தொழிலாளர்கள் எந்தவிதமான சமூக பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது ஏதாவது ஒருவித ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பம் இருக்கிறது. அம்மாதிரியாக, வேலை செய்து கொண்டிருக்கும்போது எந்தவிதமான விபத்தில் இறந்து போனாலும் அவர்களுடைய குடும்பங்களுக்கு சலுகை, உதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர வர்களே, இன்றைக்கு நடைமுறையில் இருப்பது, பனை மரம், தென்னைமரம் ஏறும்போது விபத்துக்குள்ளாவோர், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் கழிவு நீரை அப்புறப்படுத்தும் போது விபத்துக்குள்ளாவோர், விவசாயத்திற்கு அல்லது குடி நீருக்கு கிணறுகளை ஆழப்படுத்தும்போதும், புதிதாக வெட்டும் போதும் விபத்துக்குள்ளாவோர் ஆகியோர் குடும்பங்களுக்கு 5000 ரூபாய் உதவித் தொகை அளிக்கும் திட்டம் இருக்கிறது. இவைகள் மட்டுமல்லாமல் இன்னும் எவை எவைகளைச் சேர்த்தால் உண்மையாக வேலை செய்திறபோது ஆபத்துக்குள் ளாகும் குடும்பங்களுக்கு உதவ முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

1979 மார்ச் 3]

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, வெற்றிலை கொடிக்கால் தோட்டங்களில் வேலை செய்யும் போது சீர்த்த மண்டலம் என்ற ஜீவனால் பாதிக்கப்பட்டு, உடனடியாக இறந்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர வர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமான பேர் இப்படிப்பட்ட சமூகப்பாது காப்பற்று இருக்கிறார்கள். விவசாயத்தில் மட்டுமல்ல ; வேறு பல வகைகளிலும் இருக்கிறார்கள் ; கிணறு வெட்டும்போது மண்மூடி இறந்துவிடுகிறார்கள். பூச்சி மருந்து தெளிக்கும் போது இறந்து விடுகிறார்கள் : மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் சொன்னமாதிரி விஷப்பாம்புகள் கடிப்பதால் இறந்து விடுகிறார்கள் : தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது பல்வேறு காரணங்களால் இறந்து விடுகிறார்கள். இப்படி பல்வேறு வகைகளில் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்றார்கள். அத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளான எல்லாக் குடும்பங்களுக்கும் உதவி செய்யும் ஒரு திட்டத்தை செயல் படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தோட்டக் காடுகளிலேயும் விஷப்பாம்பு இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இதுவரையிலும் அரசினுடைய கவனத்திற்கு இதுபற்றிக் கொண்டுவரப்பட வில்லை. இப்போதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே அதுபற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரி வித்துக் கொள்கிறேன். அடுத்து நான் முதலிலேயே சொன்னபடி கிணறு வெட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் உதவிப் பணம் கொடுப்ப தற்கு அரசாங்கத்தினுடைய ஆணையிலே இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலை நடைமுறையில் இருந்தாலும் அது தங்களுக்கெல்லாம் கிடைக்க வில்லை என்ற ஐயப்பாட்டின் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் அதுபற்றி குறிப்பிட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே எங்கெங்கே இந்த உதவி சரியாகக் கிடைக்கவில்லை என்று சொன்னால், அது குறித்து அவர்கள் மனு செய்தால் அது குறித்து ஆராய்வதற்கு அரசு பின்வாங்காது. இந்தத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதானே தவிர வேறொன்றும் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயக் காலங்களிலே வயல் வெளிகளிலே நல்ல பாம்பு இருப்பது இல்லை. அதைச் சார்ந்த, அதன் ஆண் இனமாகிய சாரைப்பாம்பு இருக்கிறது. அதுவும் அந்த அளவுக்கு வீரியம் உள்ள பாம்புதான். மாண்புமிகு அமைச்சரவர்கள சாரைக்கடா பாம்பு என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சாரைக் கடா என்று ஒரு பாம்பு உண்டா என்று தெரிந்து கொள்கிறேன். அடுத்த பாம்பு கடித்து இறந்தாலும் அல்லது வேறு விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும்போது விபத்துக்கள் ஏற்பட்டு அதில் இறந்தாலும் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, முதலில் இந்த உதவி ஆயிரம் ரூபாய் என்ற அளவிலேதான் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அதாவது 1978-79 வரவு செலவுத் திட்டத்தின்போது இந்த அரசு புதியதாக ஒரு திட்டத்தை அறிவித்து ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, அது மிகக் குறைந்த தொகை என்று கருதிய காரணத்தால் 5 ஆயிரம் ரூபாய் என்று ஆக்கி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது பற்றிச் சொல்கிறார்கள். அரசு அதைப்பற்றி யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரப்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டுகளில் தண்டத் தீர்வை

* வினா எண். 199—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு பாசனப் பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும் என்று மார்ச்-ஏப்ரல் மாதத்தில் விவசாயிகள் குழு ஒன்று அமைச்சர்களை சந்தித்து கோரிக்கை வைத்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, இந்தத் தண்டத் தீர்வை விதித்து இருப்பது தாலுக்காவாரியாக எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டும். ஏனென்றால்